**கூடுதல் சார்பு நீதிமன்றம், திருப்பூர்.**

P.W.–1

O.S.No.418/2024

2026 ம் ஆண்டு ஜனவரி மாதம் 08 ம் நாள் வாக்குமூலம் 1969 ம் ஆண்டு விதி 44 ஏற்பாட்டின்படி திரு.கே.ஆர். கண்ணன், பி.ஏ., பி.எல்., கூடுதல் சார்பு நீதிபதி, திருப்பூர் அவர்களால் பிரமாணம் செய்யப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர் : திரு. கோவிந்தம்மாள் | வயது:57 |
| க/பெ. : திரு. ராமசாமி | முகவரி: |
| தொழில் : | |

**முதல் விசாரணை :**

1,2 வாதிகள் ஆஜர். பிரதிவாதிகள் ஆஜர் இல்லை. வாதி பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். தாவாவில் நான் இரண்டாம் வாதி. முதல் விசாரணைக்கான எனது சாட்சியத்தை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள விபரங்கள் உண்மையானவை. பிரமாண வாக்குமூலத்தை படித்து பார்த்து அதில் உள்ள விபரங்களை தெரிந்து கொண்டு வழக்குரைஞர் முன்னிலையில் கையொப்பம் செய்தேன். அதை ஏற்றுக் கொண்டு நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்களை என் தரப்பில் குறியீடு செய்ய வேண்டுகிறேன்.

| | | |
|---|---|---|
| 1 முதல் 3 வாதியின் ஆதார் அட்டை அசலுடன் ஒப்பிட்டு சரி பார்க்கப்பட்டது | ஒளி நகல் | **வா.சா.ஆ 1** |
| 16.12.1998 – முதல் பிரதிவாதி பெயரில் உள்ள கிரைய ஆவணம் | சான்றிட்ட நகல் | **வா.சா.ஆ 2** |
| 16.12.1998 – இரண்டாம் பிரதிவாதி பெயரில் உள்ள கிரைய ஆவணம் | சான்றிட்ட நகல் | **வா.சா.ஆ 3** |
| 05.11.2024 – 03.11.1996 முதல் 03.11.2024 வரை உள்ள வில்லங்கச் சான்றிதழ் | அசல் | **வா.சா.ஆ 4** |

ஆக குறியீடு செய்யப்படுகிறது. ஆகவே எனது தரப்பு சான்று ஆவணங்களை ஏற்று வழக்குப்படி உத்தரவு ஆக வேண்டுகிறேன்.

மேலும் ஆவணங்கள் குறியீடு செய்ய அவகாசம் கோரியதால் முதல் விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.

சாட்சியின் கூற்று என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

K R KANNAN

Digitally signed by K R KANNAN
Date: 2026.01.08 18:38:24 +0530

கூடுதல் சார்பு நீதிபதி,
திருப்பூர்.